Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
தினசரி தமிழ் நாளிதழ்
Madurai Mani Tamil Evening Daily
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 68 | உள்ளூர் - 09.03.2026 | திங்கள் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 68 | வெளியூர் - 10.03.2026 | செவ்வாய் | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

**வீட்டில் வாஸ்து குறை இருக்கிறதா? எப்படி கண்டறிவது..?**

**தமிழ்நாடு எழுதுபொருள்/ அச்சுத் துறை 23 காலியிடங்கள்!**

**விஜய்யை வறுத்தெடுத்த த.வெ.க. நிர்வாகி!**

**‘ஜனநாயகன்’ பட சென்சார்- தொடரும் சிக்கல்!**

## கல்வி முறையை நவீனமயமாக்கி மேம்படுத்த வேண்டும்: பிரதமர் மோடி விருப்பம்!

புதுடில்லி, மார்ச். 09–

நமது கல்வி முறையை தொடர்ந்து நவீனமயமாக்கி, தொடர்ந்து மேம்படுத்த வேண்டும் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

வளர்ச்சித் திட்டங்களை திறம்பட செயல்படுத்துவது குறித்த பட்ஜெட்டுக்கு பிந்தைய இணையவழிக் கருத்தரங்கில் பிரதமர் மோடி பேசியதாவது:

நாடு முழுவதும் விளையாட்டு உள்கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டு வருகிறது. அடுத்த சில ஆண்டுகளில் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் இந்தியாவில் நடைபெற உள்ளன. ஒலிம்பிக்கிற்கு நாடு மும்முரமாக தயாராகி வருகிறது. இதுபோன்ற சூழ்நிலையில், இளம் விளையாட்டு வீரர்களை நாம் அடையாளம் கண்டு வளர்க்க வேண்டும். அப்போது தான் இந்தியா சர்வதேச போட்டிகளில் உயரமாக பறக்க முடியும். சமீபத்திய ஆண்டுகளில், விளையாட்டு தேசிய வளர்ச்சியின் ஒரு முக்கியமாக கருதப்படுகிறது.



நமது கல்வி முறையை, உலகப் பொருளாதா ரத்துடன் இணைக்கும் வகை யில் மேம்படுத்த வேண்டும். கடந்த சில ஆண்டுகளில் சுகாதார உள்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டது என்ற தொலைநோக்குப் பார்வையில் அரசு செயல்படுகிறது. எதிர்கால தொழில்நுட்பங்களுக்கு நாம் தயாராகி வருவதால், வாய்ப்புகள் இல்லை என கருதி எந்த பெண்களும் பின்வாங்கக்கூடாது என்பது மிக முக்கியம். ஏஐ மற்றும் ஆட்டோமேஷன், டிஜிட்டல் தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவது 2026ம் ஆண்டு பட்ஜெட்டின் அடிப்படை நோக்கமாகும். கடந்த பத்தாண்டுகளில், நாடு முழுவதும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இன்று, கிராமங்கள் மற்றும் நகரங்களுக்கு அப்பால், இந்தியாவில் உள்ள ஒவ்வொரு இளைஞரும் புதிதாக ஏதாவது சாதிக்க விரும்புகிறார்கள். இளைஞர்களின் விடாமுயற்சி நமக்கு மிகப்பெரிய பலம் மற்றும் பிரகாசமான எதிர்காலத்திற்கு வழிவகுக்கும். இதைப் பயன்படுத்திக் கொள்ள, நாம் நமது கல்வி முறையை தொடர்ந்து நவீனமயமாக்கி, தொடர்ந்து மேம்படுத்த வேண்டும். புதிய கல்விக் கொள்கை இதற்குத் தேவையான அடித்தளத்தை அமைத்துள்ளது, இப்போது அதை நடை முறைப்படுத்துவது மிகவும் முக்கியம். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

## தமிழக பொறுப்பு ஆளுநராக ஆர்.வி.ஆர்லேகர் மார்ச் 12-ல் பதவியேற்பு!



திருவனந்தபுரம், மார்ச். 09–

கேரள ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் ஆர்லேகருக்கு தமிழக ஆளுநராக கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் வரும் 12–ஆம் தேதி பதவியேற்கிறார்.

## ரத்தகளறியான இந்திய பங்குச்சந்தை..

# ரூ.12 லட்சம் கோடி இழப்பு..

## கதறி அழும் முதலீட்டாளர்கள்..!





புதுடெல்லி, மார்ச். 09–

இந்திய பங்குச் சந்தை திங்கட்கிழமை பெரும் சரிவை பதிவு செய்து முதலீட்டாளர்களுக்கு ரத்த கண்ணீர் வரவழைத்துள்ளது. வாரத்தின் முதல் நாள் வர்த்தகத்தில் சென்செக்ஸ் குறியீடு கிட்டத்தட்ட 2,400 புள்ளிகள் வீழ்ந்து 76,424–ஆகவும், நிஃப்டி 50 சுமார் 700 புள்ளிகள் சரிந்து 23,750–ஆகவும் தொடங்கியது முதலீட்டாளர்களின் நம்பிக்கையை உடைந்து நொறுங்கியது. காலை 9:20 மணியளவில் பிஎஸ்இ–யில் பட்டியலிடப்பட்ட அனைத்து நிறுவனங்களின் மொத்த சந்தை மதிப்பு சுமார் 12.39 லட்சம் கோடிக்கு மேல் குறைந்து 437 லட்சம் கோடியாக சரிந்தது.

இது கடந்த வார இழப்பை மேலும் மோசமாக்கியுள்ளது. இன்றைய சரிவுக்கு மிக முக்கியமான காரணமாக இருப்பது கச்சா எண்ணெய் விலை உயர்வு. மத்திய கிழக்கில் தீவிரமடைந்துள்ள ஈரான் – அமெரிக்கா – இஸ்ரேல் மத்தியிலான மோதல் காரணமாக கச்சா எண்ணெய் விலை ஒரு பேரலுக்கு 115 டாலரை தாண்டியது. உலகின் மிக முக்கிய எண்ணெய் போக்குவரத்து பாதையான ஹார்முஸ் ஜலசந்தியை மூடப்பட்டது வாயிலாகவும், வளைகுடா நாடுகள் தனது கச்சா எண்ணெய் உற்பத்தியை குறைத்துள்ளதும் இந்த விலை உயர்வுக்கு முக்கியமான காரணமாக அமைந்துள்ளது. பங்குச்சந்தையின் இன்றைய சரிவு ஒரு சில துறையை சார்ந்து இல்லாமல் மொத்தமாக அனைத்து துறைகளையும் பாதித்துள்ளது. இதற்கு முக்கியமான காரணம் ரூபாய் மதிப்பில் ஏற்பட்ட சரிவும், கச்சா எண்ணெய் விலை உயர்வால் இந்தியாவில் உருவாகப்போகும் பணவீக்க உயர்வும் தான். இவை இரண்டும் இந்திய ரீடைல் சந்தையை தலைகீழாக புரட்டிப்போடும்.

இன்றைய வர்த்தகத்தில் சென்செக்ஸ் குறியீட்டில் அனைத்து நிறுவனங்களும் சிவப்பு நிறத்தில் ரத்தகளறியாக மாறியது. இண்டிகோ பங்கு 8 சதவீதம் சரிந்தது. டாடா ஸ்டீல், எல்அண்ட்டி, எஸ்பிஐ, மாருதி சுசுகி, இடர்னல் பங்குகள் தலா 5 சதவீதம் சரிந்தன. என்எஸ்இ–யில் நிஃப்டி பிஎஸ்யூ வங்கி குறியீடு 5 சதவீதத்துக்கு மேல் சரிந்து மிகப்பெரிய இழப்பை சந்தித்தது. நிஃப்டி ஆட்டோ 4 சதவீதம், நிஃப்டி ரியாலிட்டி மற்றும் நிஃப்டி பிரைவேட் வங்கி குறியீடுகள் 3 சதவீதத்துக்கு மேல் சரிந்தன.

மொத்தத்தில், ஈரான் போர் எண்ணெய் விலையை $100–ஐ தாண்டச் செய்துள்ளது. இது இந்திய பங்குச் சந்தையை பெரிதும் பாதித்துள்ளது. சென்செக்ஸ் 2,400 புள்ளிகள், நிஃப்டி 700 புள்ளிகள் சரிந்துள்ளன. இந்தியாவின் எண்ணெய் இறக்குமதி செலவு பெரிதும் உயரும். பணவீக்கம் தீவிரமாகும். முதலீட்டாளர்கள் இந்த சூழலை கவனமுடன் அவதானிக்க வேண்டும். உலக நாடுகள் இந்த பதற்றத்தை தீர்க்க முயற்சி செய்ய வேண்டிய நேரம் இது. இந்தியா மாற்று எண்ணெய் ஆதாரங்களை தேட வேண்டும். இன்றைய 12 லட்சம் கோடி இழப்புக்கு முக்கியமான காரணம் இதுதான்: கச்சா எண்ணெய் விலை $100–ஐ கடந்தது மத்திய கிழக்கு பதற்றம் அதிகரித்ததால் உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை திடீரென உயர்ந்துள்ளது. WTI மற்றும் Brent கச்சா எண்ணெய் விலை $118 வரை உயர்ந்து பல வருட உச்சத்தை தொட்டுள்ளது. ஹார்முஸ் நீர் வழி பதையில் எண்ணெய் விநியோகத்தின் 20% செல்லும் நிலையில், ஈரான் படைகள் இதை கைப்பற்றியிருக்கும நிலையில் விநியோகத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற அச்சம் சந்தையை அதிர்ச்சியடையச் செய்துள்ளது. மத்திய கிழக்கு போர் தீவிரம் ஈரான், இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா இடையிலான மோதல் மேலும் தீவிரமடைந்துள்ளது. எண்ணெய் கிடங்குகள் மீது தாக்குதல், ட்ரோன் தாக்குதல்கள் மற்றும் புவிசார் அரசியல் பதற்றம் அதிகரித்ததால் உலக முதலீட்டாளர்கள் கவலையில் உள்ளனர். இந்த மோதலுக்கு விரைவில் தீர்வு கிடைக்கும் என்ற அறிகுறிகள் தற்போது இல்லை. ரூபாய் மதிப்பு சரிவு எண்ணெய் விலை உயர்வின் தாக்கமாக இந்திய ரூபாய் மதிப்பு அமெரிக்க டாலருக்கு எதிராக 92.34–ஐ கடந்துள்ளது. சர்வதேச சந்தை நிலவரம் மற்றும் வெளிநாட்டு முதலீட்டு வெளியேற்றம் ரூபாயின் மதிப்பை பெரிதும் பாதித்து வகுகிறது.

அமெரிக்க பத்திரப் முதலீடு கச்சா எண்ணெய் விலை உயர்வு காரணமாக பணவீக்கம் அதிகரிக்கலாம் என்ற அச்சம் உருவாகியுள்ளது. இதன் விளைவாக அமெரிக்க அரசுப் பத்திரங்களின் (US Trea–sury) முதலீடு அதிகரித்து வட்டி விகிதம் உயர்ந்து முதலீட்டாளர்கள் பங்குச் சந்தையை விட பாதுகாப்பான முதலீடுகளுக்கு திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் விற்பனை மத்திய கிழக்கு பதற்றம் மற்றும் கச்சா எண்ணெய் விலை உயர்வு காரணமாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இந்திய பங்குகளை தொடர்ந்து விற்று வருகின்றனர். மார்ச் மாதத்தின் துவக்கத்தில் இருந்து அதிகளவில் விற்பனை செய்து வரும் காரணத்தால் இதை உள்நாட்டு முதலீட்டாளர்கள் நிரப்பி வருகின்றனர். சர்வதேச பங்குச் சந்தைகள் சரிவு எண்ணெய் விலை உயர்வு உலக சந்தைகளிலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஜப்பான், தென் கொரியா, ஹாங்காங் உள்ளிட்ட ஆசிய சந்தைகள் கடுமையாக சரிந்துள்ளன. அதேபோல் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய பங்குச் சந்தைகளும் வீழ்ச்சியுடன் முடிந்துள்ளன. இந்திய பொருளாதாரத்துக்கு ஏற்படும் தாக்கம் கச்சா எண்ணெய் விலை தொடர்ந்து உயர்ந்தால் இந்தியாவில் பணவீக்கம் அதிகரித்து ரூபாய் மீது அழுத்தம் உருவாகலாம். இறக்குமதி செலவுகள் அதிகரிப்பதால் இந்தியாவின் நடப்பு கணக்கு பற்றாக்குறை கூடும் என்று மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. முதலீட்டாளர்களுக்கு ஆலோசனை போர் போன்ற அரசியல் பதற்றங்கள் சந்தையை தற்காலிகமாக மட்டுமே பாதிக்கும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர். இதனால் முதலீட்டாளர்கள் தற்போது நீண்டகால முதலீட்டை டார்கெட் செய்து பணத்தை முதலீடு செய்ய வேண்டும் எனவும், விலை குறைவை Buying வாய்ப்பாக பார்க்க லாம் என கூறுகின்றனர். ஆனால் எப்போது வாங்குகி றோம், எப்போது பங்குகள் சரிவு பாதையில் இருந்து உயர்வு பாதைக்கு திரும்புகி றது என்பதை கண்காணித்து முதலீடு செய்ய வேண்டும் எனவும் அறிவுறுத்துகின்றனர்.

## மேற்காசிய நிலவரம் என்ன? ராஜ்யசபாவில் விளக்கிய மத்திய அமைச்சர் ஜெய்சங்கர்!

புதுடில்லி, மார்ச். 09–

மேற்காசிய பிரச்னைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் மட்டுமே தீர்வு காண வேண்டும் என ராஜ்யசபாவில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

பார்லிமென்ட் பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாம் கட்ட அமர்வு, இன்று (மார்ச் 09) காலை 11 மணிக்கு தொடங்கியது. லோக்சபாவில் மறைந்த எம்பிக்களுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு ஒத்திவைக்கப்பட்டது.

கூட்டத்தொடரின் 2ம் கட்ட அமர்வு ஏப்ரல் 2ம் தேதி வரை நடக்கிறது. ராஜ்யசபாவில் டி–20 கிரிக்கெட் போட்டியில் சாம்பியன் பட்டம் பெற்ற இந்திய அணியினருக்கு அவை தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் பாராட்டும், வாழ்த்தும் தெரிவித்தார்.

ஈரான் – இஸ்ரேல் போர் காரணமாக வளைகுடா நாடுகளில் தவித்து வரும் இந்தியர்கள் நிலை குறித்து விவாதிக்க வேண்டும் என காங்., ராஜ்யசபா தலைவர் கார்கே கேள்வி எழுப்பினார். பின்னர்



மேற்காசிய நிலவரம் குறித்து ஜெய்சங்கர் அளித்த விளக்கம்:

* மேற்காசிய பிரச்னைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் மட்டுமே தீர்வு காண வேண்டும். அதைத்தான் இந்திய சார்பில் வலியுறுத்தி உள்ளோம்.
* மேற்காசிய நிலவரம் குறித்து பிரதமர் மோடி கண்காணித்து வருகிறார். பதட்டங்களை தணிக்கவும், அடிப்படை பிரச்னைகளையும் தீர்க்கவும் வலியுறுத்தி இருக்கிறோம்.
* கச்சா எண்ணெய் விலை உயர்வை மத்திய அரசு உன்னிப்பாக கவனித்து வருகிறது.
* ஈரானில் உள்ள இந்தியர்களுக்கு தொடர்ந்து தூதரகம் மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டது. அங்கு வசிக்கும் இந்தியர்களின் நலனை பாதுகாப்பதில் மத்திய அரசு உறுதி பூண்டுள்ளது.
* ஈரான் – இஸ்ரேல் உள்ளிட்ட மேற்காசிய நாடுகளில் நிலவி வரும் போரை முடிவுக்கு கொண்டு வர இந்தியா விரும்புகிறது. போர் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சக குழு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளோம்.
* இது வெறும் ஈரான் –இஸ்ரேல், அமெரிக்க போர் மட்டும் கிடையாது அந்த பிராந்தியத்தை சுற்றியுள்ள பல நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளது.
* எரிபொருட்களுக்கு எவ்வித தட்டுப்பாடும் வராமல் இருக்க தேவையான அனைத்து நடவடிக்கையும் எடுத்துள்ளோம். * மேற்காசிய நிலைமை கவலைக்குரியது. அனைத்து தரப்பினரும் நிதானத்தை கடைப்பிடிக்கவும், பொதுமக்களின் பாதுகாப்பு முன்னுரிமை அளிக்கவும் வலியுறுத்தி உள்ளோம்.
* அனைத்து நாடுகளின் இறையாண்மையையும் மதிக்க வேண்டியது அவசியமாகும்.
* வளைகுடா நாடுகளில் கிட்டத்தட்ட ஒரு கோடி இந்திய குடிமக்கள் வசித்து வேலை செய்கிறார்கள். ஈரானிலும், படிப்பு அல்லது வேலைவாய்ப்புக்காக சில ஆயிரம் இந்தியர்கள் அங்கு உள்ளனர்.
* அங்கு இந்தியர்கள் எதிர்கொள்ளும் சிமங்களை அரசு கவனித்து வருகிறது. இந்த பிரச்னையைத் தீர்க்க உரிய நடவடிக்கைகளை எடுக்க அனைத்து சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் மற்றும் துறைகளுக்கு உத்தரவிடப்பட்டு உள்ளது. இவ்வாறு ஜெய்சங்கர் பேசினார்.



## வேட்பாளர் நேர்காணலா? சிபிஐ விசாரணையா?

சென்னை, மார்ச். 09–

தவெக வேட்பாளர் தேர்வு நாளை (மார்ச் 10–ல்) நடைபெற உள்ள நிலையில் கரூரில் 41 பேர் உயிரிழந்த வழக்கு சம்பந்தமாக விஜய் மார்ச் 10–ல் நேரில் ஆஜராக சிபிஐ சம்மன் அனுப்பியுள்ளது.

## அ.தி.மு.க. கூட்டணியில் த.வெ.க. இணையுமா?: விஜய்-க்கு ஆலோசனை வழங்கிய பவன் கல்யாண்!

சமீபத்தில், சென்னையில் நடைபெற்ற சகோதரர் வீட்டு இல்லத் திருமண விழாவில் பங்கேற்க வந்த ஜெகன்மோகன் ரெட்டியை விஜய் சந்தித்து அரசியல் ஆலோசனைகளை கேட்டுப் பெற்றதாக பரபரப்பாக பேசப்பட்டது. அப்போது, “ஒரு மாநிலத்தில் அரசியல் கட்சி நடத்தும் நீங்கள், ஏன் தேவையி ல்லாமல் மத்திய அரசை எதிர்த்து பேசி பகைத்துக்கொள்ள வேண்டும். தற்போ தைய சி.பி.ஐ. விசாரணைக்கு அதுகூட ஒரு காரணமாக இருக்கலாம். எனவே, நீங்கள் மாநில கட்சிகளை மட்டும் விமர்சனம் செய்யுங்கள்” என்று ஆலோசனை வழங்கியதாக தெரிகிறது.

**பவன் கல்யாண் வழங்கிய ஆலோசனை என்ன?**

அதன்பிறகுதான் தனது பிரசார கூட்டங்களில், மத்திய அரசை விமர்சிப்பதை நடிகர் விஜய் நிறுத்திக்கொண்டார். தற்போது, கூட்டணி குறித்து பவன் கல்யாண் வழங்கிய ஆலோசனையையும் நடிகர் விஜய் ஏற்றுக்கொள்வார் என்றே தெரிகிறது.

நடிகர் விஜய்யிடம் பவன் கல்யாண், “திருப்பதியில் நடந்த பெரும் மாநாட்டில்



ஏராளமான மக்கள் வந்திருந்தபோதும், எனது அண்ணன் சிரஞ்சீவியால் அங்கு வெற்றி பெற முடியவில்லை. நானும் கூட வெற்றி பெற முடியவில்லை. அதன் அடிப்படையில் ஒரு சாணக்கியத்தனமான அரசியல் முடிவை எடுக்காமல் வெற்றி பெற முடியாது என்பதை உணர்ந்து, தேசிய ஜனநாயகக் கூட்டணியுடன், குறிப்பாக தெலுங்கு தேசம் மற்றும் பாரதிய ஜனதா கட்சியுடன் இணைந்தேன். அதன் மூலம் 2 நாடாளுமன்ற உறுப்பினர்களையும், 23 சட்டமன்ற உறுப்பினர்களையும் பெற்று ஜனசேவா அரசியலைத் தக்க வைத்துக்கொண்டேன். எனவே, அதேபோல் நீங்களும் சாணக்கியத்தனமாக செயல்பட்டு, தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்து உங்களுக்கான அரசியல் இடத்தை உறுதி செய்துகொள்ளுங்கள்” என்று கூறியதாக சொல்லப்படுகிறது.

**துணை முதல்–அமைச்சர் பதவி**

அ.தி.மு.க. கூட்டணிக்கு தமிழக வெற்றிக் கழகம் வந்தால், 50 இடங்களுக்கு குறையாமல் தொகுதிகள் ஒதுக்கப்படும் என்றும், தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தால் கட்சியின் தலைவர் விஜய்யுக்கு துணை முதல்–அமைச்சர் பதவி வழங்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

இனி இறுதி முடிவை தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய்தான் எடுக்க வேண்டும். தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தையை தொடங்காமல், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியும் காத்திருப்பது இதற்குத்தானாம்.

**தி.மு.க. கூட்டணிக்கு கடும் சவால்**

தற்போது, விஜய்யுடன் பேச்சு வார்த்தை நடத்தி வரும் பா.ஜ.க.வின் முயற்சி வெற்றி பெற்றால், வரும் தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு கடும் சவால் அளிப்பதுடன் தேர்தலில் வெற்றி பெறவும் பிரகாசமான வாய்ப்பு இருப்பதாக அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள்.

## திருச்சியில் 12-வது திமுக மாநில மாநாடு ; முக்கிய அறிவிப்புகளை வெளியிடும் முதல்வர்?

திருச்சி, மார்ச். 09–

திருச்சி மாவட்டம் சிறுகனூரில் இன்று திமுக சார்பில் 12வது மாநில மாநாடு நடைபெற உள்ளது. முக்கிய தேர்தல் வாக்குறுதிகளை தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான ஸ்டாலின் வெளியிட உள்ளார். சட்டசபை தேர்தலை முன்னிட்டு திமுக சார்பில், ‘ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்’ என்ற தலைப்பில் திருச்சி சிறுகனூரில் தேர்தல் அரசியல் மாநாடு இன்று நடைபெற உள்ளது. இதற்காக திமுக முதன்மைச் செயலாளரும், அமைச்சருமான நேரு தலைமையில் பிரம்மாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சிறுகனூர் மாநாட்டுக்காக 700 ஏக்கரில் மாநாட்டு வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. இதில், 200 ஏக்கரில் மாநாட்டு அரங்கமும், 240 அடி நீள பிரம்மாண்ட



மேடையும் பிரம்மாண்ட எல்இடி திரையும் அமைக்கப்பட்டுள்ளன. இதுதவிர, மாநாட்டுத் திடலில் 168 இடங்களில் எல்இடி திரைகள் பொருத்தப்பட்டுள்ளன. கோட்டை வடிவில் 1,000 அடி நீளத்துக்கு பிரம்மாண்ட முகப்பு அமைக்கப்பட்டு ஈவெரா, அண்ணாதுரை, கருணாநிதி, ஸ்டாலின், உதயநிதி ஆகியோரது படங்கள் இடம் பெற்றுள்ளன.

மாநாட்டில் 3.60 லட்சம் நாற்காலிகள் போடப்பட்டுள்ளன. 48 நுழைவுவாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாநாட்டுக்கு வருவோருக்கு குடிநீர் பாட்டில் அடங்கிய பை வழங்கப்படுகிறது. மேலும், மாநாட்டு திடலில் 4 லட்சம் பேருக்கு உணவு வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாநாட்டில் பங்கேற்பதற்காக முதல்வர் ஸ்டாலின் சென்னையில் இருந்து தனி விமானத்தில் திருச்சி வருகிறார். மாநாட்டு வளாகத்தின் முகப்பில் உள்ள 100 அடி உயர கொடிக் கம்பத்தில் கட்சிக் கொடியை ஏற்றிவிட்டு அரங்கிற்குள் செல்கிறார். அங்கிருந்து 600 அடி நீள ரேம்பில் நடந்து மேடைக்குச் செல்கிறார். 2021ம் ஆண்டைப்போல இந்த மாநாட்டிலும் முக்கிய அறிவிப்புகளை முதல்வர் வெளியிட உள்ளார்.

# ஈரானின் புதிய உச்ச தலைவராக மொஜ்தபா காமேனி அறிவிப்பு!



ஈரான், மார்ச். 09–

அணுசக்தி ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுத்ததால் ஈரான் மீது அமெரிக்கா – இஸ்ரேல் இணைந்து போர் தொடுத்துள்ளன. இந்த தாக்குதலில் ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி கொல்லப்பட்டார். மேலும் ராணுவ தளபதிகள் உள்பட உயர் அதிகாரிகளும் உயிரிழந்தனர்.

ஒரு வாரத்துக்கு மேலாக ஈரானில் போரிட்டு வரும் அமெரிக்கா – இஸ்ரேல் படைகள், தலைநகர் டெஹ்ரான் உள்ளிட்ட பல்வேறு நகரங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகின்றன. ஈரான் மீது வலிமையான தாக்குதல் நடத்தப்படும் என்று எச்சரிக்கை விடுத்துள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப், ஆயுதங்களை கைவிட்டு சரணடைய வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக, அமெரிக்கா, இஸ்ரேலுக்கு எதிராக அடுத்த 6 மாதங்களுக்கு தொடர்ந்து தீவிரமாக போர் புரியும் வலிமை எங்களுக்கு இருக்கிறது என்று ஈரான் தெரிவித்துள்ளது.

இதனிடையே ஈரானின் புதிய உச்ச தலைவரை தேர்வு செய்வதற்காக மதகுருமார் கவுன்சில் ஆலோசனை நடத்தியது. இந்த நிலையில், ஈரானின் புதிய உச்ச தலைவராக அயதுல்லா காமேனியின் மகன் மொஜ்தபா காமேனி தேர்வு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல்; 15 பேர் பலி!

பெய்ரூட், மார்ச். 09–

லெபனான் சுகாதார அமைச்சகம் வெளியிட்ட செய்தியில், நாடு முழுவதும் பல்வேறு இடங்களை இலக்காக கொண்டு இஸ்ரேல் இன்று தாக்குதல் நடத்தியது. இதில், 15 பேர் பலியாகி உள்ளனர். 15 பேர் காயமடைந்தனர்.

அமெரிக்காவால் பயங்கரவாத அமைப்பு என அறிவிக்கப்பட்ட ஹிஸ்புல்லா அமைப்பு, இஸ்ரேல் மீது பதிலடி தாக்குதல்களை நடத்துவோம் என அறிவித்து உள்ளது. இதனால், லெபனான் தலைநைகர் பெய்ரூட் மற்றும் தெற்கு லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது.

இதில் பெய்ரூட்டில் உள்ள ஓட்டலில் நடத்தப்பட்ட தாக்குதலில் 4 பேர் பலியானார்கள். ஜபால் அல்–பதவும் மற்றும் காபிர் ரும்மன் நகரங்களில் 5 பேர் பலியாகி உள்ளனர் என தெரிவித்து உள்ளது.

# பெண்ணியம் பேசும் உங்களிடம் கண்ணியம் உள்ளதா?... விஜய்யை கடுமையாக சாடிய தவெக பெண் நிர்வாகி!

சென்னை, மார்ச். 09–

தவெக பெண் நிர்வாகி ரஞ்சனா நாச்சியார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:– அனைவருக்கும் மகளிர் தின நல்வாழ்த்துகள். முக்கியமாக எங்கள் தலைவர், விஜய்க்கும் என் மகளிர் தின வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். பெண்ணியம் பேசும் உங்களிடம் கண்ணியம் உள்ளதா?''

நேற்று தமிழக வெற்றி கழகம் சார்பாக மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. அந்த மேடையில் தலைவர் பல கருத்துகளை பகிர்ந்தார். அதில் குறிப்பிடத்தக்க ஒன்று அவருக்கும் அவரது மனைவிக்கும் இடையே நிலவிவரும் பிரச்சினையை நேரடியாகச் சொல்லாமல், கோடிட்டு காட்டும் விதத்தில் குறிப்பிட்டிருந்தது. ''அதைப் பற்றி நீங்கள்



கவலைப்பட வேண்டாம். நான் பார்த்துக்கொள்கிறேன். அது வொர்தே இல்லை'' என்று கூறினீர்கள். அந்த ஒரு வாக்கியம் தான் இன்று பல கேள்விகளை எழுப்புகிறது. எது வொர்த் இல்லை தலைவா? உங்கள் மனைவியா? அல்லது உங்கள் திருமண வாழ்க்கையா?.

ஒரு அரசியல் தலைவர் பேசும் ஒவ்வொரு சொல்லும் ஒரு குடும்பத்தில் மட்டும் ஒலிக்காது. அது ஒரு சமூகத்தின் மனதிலும் ஒலிக்கும். உங்கள் மனைவி அவர்கள் உங்கள் வீட்டுக்குள் அவர்களை அனுமதிக்கப்பட வேண்டுமென்று நீதிமன்ற த்தை நாடியிருக்கிறார் என்று செய்திகள் வெளிவருகின்றன. உங்கள் மனைவியை உங்கள் வீட்டினுள் அனுமதிக்காமல் இருக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டுகள் பேசப்படும் நேரத்தில்,''வீட்டிற்கு ஆறு சிலிண்டர் இலவசமாக தருகிறேன்'' என்று மேடையில் பேசுவது ஒரு கடுமையான முரண்பாடாக தெரியவில்லையா?.

ஒரு பக்கம் பெண்கள் உயர்வு பற்றி பேசுகிறீர்கள். மற்றொரு பக்கம் பெண்களின் மரியாதையை காக்கும் மொழி கூட உங்கள் வார்த்தைகளில் காணப்படவில்லை என்றால், அந்த அரசியல் எதற்காக? உங்கள் உண்மை முகம்தான் என்ன ? உங்களை தெய்வமாகக் கருதி வாழும் உங்கள் ரசிகர்கள், குறிப்பாக இன்றைய Gen–Z தலைமுறையினர், சமூக ஊடகங்களில் என்ன பேசுகின்றனர் தெரியுமா?''எங்கள் தலைவன் ஏழு பொண்டாட்டி கட்டுவான், அதில் தவறு இல்லை''என்று எழுதுபவர்கள் இருக்கின்றனர்.

''நான் உனக்கு பொண்டாட்டியாக வருகிறேன்; உன் மனைவியை விட்டு விலகிவிடு'' என்று எழுதும் பதிவுகளும் இருக்கின்றன, இந்த மொழி யாரால் உருவாக்கப்பட்டது? இந்த மனநிலை எங்கே இருந்து வந்தது? ஒரு தலைவரின் சொல் ஒரு ரசிகனின் முழக்கமாக மாறும். ஒரு தலைவரின் செயல் ஒரு இளைஞனின் நடத்தை ஆகிவிடும். ''தலைவன் எவ்வழியோ தொண்டனும் அவ்வழியே'' என்ற பழமொழி உங்களுக்கு தெரியாதா?. ஒரு நடிகையை கூட்டிக்கொண்டு பொது வெளியில் வரும்போது, அதை பார்த்து இன்றைய இளைஞர்கள் என்ன கற்றுக்கொள்வார்கள்?. ''திருமணத்திற்கு பின்பு நாமும் இப்படியே வாழலாம்'' என்ற எண்ணம் அவர்களிடம் விதைக்கப்படாதா?.

இது தான் நம் தமிழ் கலாச்சாரமா? தமிழ் பண்பாடு பெண்களை பொருளாக பார்க்கவில்லை. மரியாதையாக பார்த்தது. தமிழ் மரபு பெண்களை இழிவுபடுத்தவில்லை. அவர்களை உயர்த்தியது. நம் கலாச்சாரம் என்ன சொல்கிறது? இழவு வீட்டிற்கு சென்று கேதம் கேட்பதே நம் பண்பு. அன்பும் மரியாதையும் காக்கும் வாழ்வே நம் வழி. துயரத்தில் இருக்கும் குடும்பங்களிடம் சென்று, அவர்களின் கண்ணீரை துடைப்பதே தமிழர் மரபு. அவர்களின் துயரத்தை பகிர்ந்து கொள்வதே மனிதநேயத்தின் அடையாளம்.

ஆனால் நீங்கள் என்ன செய்தீர்கள்? கரூரில் உயிரிழந்த 41 பேரின் குடும்பங்களை, அவர்கள் துயரத்தில் இருக்கும் அந்த நேரத்தில், அவர்களையே உங்கள் இடத்திற்கு வரவைத்து இரங்கல் தெரிவித்தீர்கள். இது தான் நம் கலாச்சாரமா?. இது தான் தமிழர் பண்பாட்டின் வழியா?. துயரத்தில் இருக்கும் மனிதர்களிடம் செல்வதே மரபு, அவர்களை அழைத்து வருவது மரபல்ல. அதையும் ''பரவாயில்லை'' என்று ஏற்றுக்கொண்டு விட்டுவிட்டதால் இது ஒரு தவறான முன்னுதாரணமாக மாறி விட்டது. ஒரு தலைவர் உருவாக்கும் நடைமுறை, நாளைய அரசியலின் ட்ரெண்டாக மாறிவிடும். அதனால் தான் நான் கேட்கிறேன் – தமிழக அரசியலில் நாம் உருவாக்க வேண்டியது மரபை மதிக்கும் கலாச்சாரமா? அல்லது மரபை மாற்றும் மோசமான ட்ரெண்ட் செட்டிங்களா?. தமிழர் கலாச்சாரம் மரியாதையை கற்றுக் கொடுத்தது. அந்த மரியாதையை காக்கும் அரசியல் தான் தமிழகத்திற்கு தேவையான அரசியல் அந்த மரபை மாற்றும் வழியில் நாம் போகக் கூடாது.

எனது மூதாதையரான வேலுநாச்சியாரை கொள்கைத் தலைவராக கூறிக்கொண்டு, பெண்ணியம் பேசும் நீங்கள், உங்கள் சொந்த வாழ்க்கையிலும் அந்த கண்ணியத்தை காக்க வேண்டாமா? பெண்ணியம் என்பது மேடையில் முழக்கம் அல்ல. வாழ்க்கையில் ஒழுக்கம். பெண் என்பது ஒரு உறவு மட்டும் அல்ல. ஒரு மரியாதை. இன்றைய Gen–Z தலைமுறையின் பெற்றோர்கள் கூட, உங்கள் செயல்–பேச்சுகளை பார்த்து மெதுவாக கவலைப்படத் தொடங்கியுள்ளனர். நன்றாக வளர்ந்து கொண்டிருக்கும் ஒரு அரசியல் இயக்கம், தலைவரின் தனிப்பட்ட ஒழுக்கம் காரணமாக தேய்ந்து போகக் கூடாது. அது உங்களுக்கு தெரியவில்லையா? அல்லது தெரிந்தும் புறக்கணிக்கிறீர்களா?.

''பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் தாய் மாமனாக சீர் கொடுப்பேன்'' என்று நீங்கள் கூறியிருக்கிறீர்கள். அது நல்ல எண்ணம். ஆனால் அடுத்த குழந்தைக்கு தாய் மாமனாக இருப்பதற்கு முன், பெற்ற குழந்தைகளுக்கு தகப்பனாக இருப்பது முக்கியம் இல்லையா ? நீங்கள் சீர் கொடுக்க வேண்டாம் தலைவா இளைஞர்களை சீர் குலைக்காமல் இருப்பதே சிறந்தது. ஒரு தலைவர் சமூகத்திற்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும். ஒரு தலைவர் உருவாக்கும் கலாச்சாரம் தான் ஒரு தலைமுறையை உருவாக்கும். தவெகவில் உங்களுடன் இணைந்து பயணிக்கும் நான் அக்கறையுடன் எச்சரிக்க வருகிறேன். மோசமான ட்ரெண்ட் செட்டராக மாறிவிடாதீர்கள். தமிழக இளைஞர்களுக்கு நல்ல முன்னுதாரணமாகவே இருங்கள்.

நம் மதிப்பையும் மரியாதையும் நாம் தான் வளர்த்துக் கொள்ள வேண்டும். நாம் செய்யும் ஒவ்வொரு செயலும், நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தையும், அந்த மரியாதையை உயர்த்தவோ அல்லது மெதுவாகக் குறைக்கவோ செய்கிறது. சரியோ தவறோ அதைப் பற்றி பேசாமல் மௌனம் காப்பது அறிவுடைமை அல்ல. சமுதாயத்திற்கு நாம் செய்யும் துரோகம். ஏனெனில் மௌனம் பல நேரங்களில் ஒப்புதலாகப் புரிந்துகொள்ளப்படுகிறது.

# டிரம்ப் மிரட்டலுக்கு பணிந்தது தென்கொரியா- அமெரிக்காவில் ரூ.29 லட்சம் கோடி முதலீடு செய்ய முடிவு!



சியோல், மார்ச். 09–

தென் கொரிய பொருட்கள் மீது 25 சதவீத கூடுதல் இறக்குமதி வரி விதிக்கப்போவதாக அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் விடுத்திருந்த மிரட்டல், தற்போது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

தென்கொரியா கடந்த ஆண்டு அமெரிக்காவுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி, ரூ.29 லட்சம் கோடி (350 பில்லியன் டாலர்) தொகையை அமெரிக்காவில் முதலீடு செய்ய ஒப்புக்கொண்டது. ஆனால், இந்த முதலீட்டு திட்டங்களை செயல்படுத்துவதில் தென் கொரிய நாடாளுமன்றம் தாமதம் செய்து வந்தது.

இதனால் ஆத்திரமடைந்த டிரம்ப், தென் கொரியாவில் இருந்து இறக்குமதியாகும் கார்கள் மற்றும் எலக்ட்ரானிக் பொருட்கள் மீது 25 சதவீத வரி விதிக்கப்படும் என எச்சரித்திருந்தார்.

இந்த வரி உயர்வு அமலுக்கு வந்தால் தென் கொரியப் பொருளாதாரம் பெரும் பாதிப்பைச் சந்திக்கும் என்பதால், அந்நாட்டு அரசு அவசர நடவடிக்கை எடுத்துள்ளது.

இது குறித்து பேசிய தென் கொரிய தொழில் துறை மந்திரி கிம் ஜங்–குவான், ''அமெரிக்காவில் முதலீடு செய்வதற்கான சிறப்புச் சட்டத்தை வரும் 12–ந் தேதி தென் கொரிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற உள்ளோம். இந்த தகவல் அமெரிக்காவுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வரி உயர்வு அபாயம் நீங்கியுள்ளது.'' எனத் தெரிவித்தார்.

இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால், சாம்சங் மற்றும் ஹூண்டாய் போன்ற நிறுவனங்கள் அமெரிக்காவில் பெரிய தொழிற்சாலைகளை அமைக்கும். இதன் மூலம் பல்லாயிரக்கணக்கான அமெரிக்கர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதால் டிரம்ப் நிர்வாகம் இதில் பிடிவாதமாக இருந்தது. தற்போது தென் கொரியா இதற்குச் சம்மதித்துள்ளதால் இரு நாடுகளிடையே நிலவிய வர்த்தகப் போர் முடிவுக்கு வந்துள்ளது.

# விஜய் நல்ல முடிவை எடுக்க வேண்டும்: பா.ஜ.க. அழைப்பு!



சென்னை, மார்ச், 09–

தமிழக பா.ஜனதா மாநில செய்தி தொடர்பாளர் ஏ.என். எஸ்.பிரசாத் வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, தி.மு.க.வை ஆட்சிக்கு வரவிடாமல் தடுப்பது தான் தனது லட்சியம் என த.வெ.க. தலைவர் விஜய் கூறி வருகிறார் இது உண்மையாக இருந்தால், அவர் அ.தி.மு.க.–பா.ஜனதா கூட்டணியில் இணைய வேண்டும். ஆட்சி, அதிகாரம், யாருக்கு எத்தனை சீட்? யார் முதல்–அமைச்சர் என்பதை விட, யார் முதல்–அமைச்சராக வரக்கூடாது? என்பதுதான் நம் ஒவ்வொருவரின் சிந்தனையாக இருக்க வேண்டும். தி.மு.க.வை வெற்றி பெற வைக்கும் மறை முக முயற்சிக்கு விஜய் துணை போக கூடாது.

தமிழக மக்களின் நலன் காக்க, தி.மு.க.வை விரட்டக்கூடிய இந்த அரசியல் போர்க்களத்தில் மாபெரும் சரித்திர நாயகனாக விஜய் துணிந்து ஒரு நல்ல முடிவெடுக்க வேண்டும்.

# கிரெடிட் கார்டு விதிகளில் ஏப்.1 முதல் வரும் முக்கிய மாற்றங்கள்!




சென்னை, மார்ச். 09–

வரும் ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் கிரெடிட் கார்டு விதிகளில் சில முக்கிய மாற்றங்கள் கொண்டு வரப்படுகின்றன. அதன் விவரங்களை பார்க்கலாம்.

இனி கிரெடிட் கார்டுக்கு விண்ணப்பிக்கும்போது பான் அட்டை கட்டாயம். பான் அட்டை இல்லாமல் வங்கிகள் விண்ணப்பங்களை ஏற்கமாட்டார்கள். இதனால் செலவுகள் வரி அமைப்புடன் இணைக்கப்படும். போலி கணக்குகள் மற்றும் தவறான பயன்பாடு குறையும்.

மேலும், ஒரு நிதியாண்டில் கிரெடிட் கார்டு மூலம் ரூ.10 லட்சம் அல்லது அதற்கு மேல் ரொக்கமற்ற செலவுகள் செய்தால், அந்த விவரங்களை வங்கி வருமான வரித்துறைக்கு தெரிவிக்க வேண்டும். அதேபோல், ரூ.1 லட்சம் அல்லது அதற்கு மேல் ரொக்கப் பரிவர்த்தனை செய்தாலும் அது கண்காணிக்கப்படும். அதிக மதிப்புள்ள பரிவர்த்தனைகள் அனைத்தும் பதிவு செய்யப்படும். இனி கிரெடிட் கார்டு மூலம் வருமான வரியும் செலுத்த முடியும். இது வசதியாக இருந்தாலும், செயலாக்கக் கட்டணம் மற்றும் வட்டி விதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. எனவே கவனமாக பயன்படுத்த வேண்டும். நிறுவனங்கள் ஊழியர்களு க்கு வழங்கும் கிரெடிட் கார்டுகளையும் கவனமாக கையாள வேண்டியிருக்கும். அந்த அட்டை தனிப்பட்ட செலவுக்கு பயன்படுத்தப்ப ட்டால், அந்த தொகை ஊழியரின் வருமானமாகக் கருதப்படலாம். அதற்கு வரியும் விதிக்கப்படலாம். எனவே, அலுவலக செலவு கள் மற்றும் தனிப்பட்ட செலவுகள் தெளிவாகப் பிரிக்கப்பட்டிருக்க வேண்டும். கடந்த மூன்று மாதங்களுக்குள் வழங்கப்பட்ட கிரெடிட் கார்டு அறிக்கையை பான் கார்டு விண்ணப்பத்திற்கான செல்லுபடியாகும் முகவரிச் சான்றாக வழங்கலாம். இது கூடுதல் ஆவணங்களுக்கான தேவையைக் குறைப்பதன் மூலம் பான் விண்ணப்ப செயல்முறையை எளிதாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# போட்டி நடத்திய நாடு, 3 முறை உலகக் கோப்பை வென்று சாதனை படைத்த இந்தியா!



அகமதாபாத், மார்ச். 09–

டி20 உலகக் கோப்பை தொடரின் இறுதிப்போட்டி அகமதாபா த்தின் நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெற்றது. இதில் இந்தியா, நியூசிலாந்து அணிகள் மோதின. முதலில் ஆடிய இந்திய அணி அபிஷேக் சர்மா, சஞ்சு சாம்சன், இஷான் கிஷன் அதிரடி அரை சதங்களால் 255 ரன்கள் குவித்தது.

நியூசிலாந்து சார்பில் ஜேம்ஸ் நீஷம் 3 விக்கெட் வீழ்த்தினார்.

தொடர்ந்து ஆடிய நியூசிலாந்து 19 ஓவரில் 159 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இதன்மூலம் 96 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்தியா மீண்டும் உலகக் கோப்பையை வென்றுது. இந்நிலையில், போட்டியை நடத்திய நாடு என்ற முறையில் முதல் முறையாக சாம்பியன் பட்டம் வென்று புதிய சாதனையை படைத்துள்ளது இந்தியா.

இதேபோல், 3 முறை டி20 உலகக் கோப்பையை வென்ற ஒரே அணியாக இந்தியா சாதனை படைத்துள்ளது.

# பாகிஸ்தானில் ராணுவ அலுவலகம் மீது தாக்குதல்: இம்ரான்கான் ஆதரவாளர்களுக்கு 10 ஆண்டு சிறை!





இஸ்லாமாபாத், மார்ச். 09–

பாகிஸ்தானில் கடந்த 2023–ம் ஆண்டு முன்னாள் பிரதமர் இம்ரான் கான் கைது செய்யப்பட்டபோது, அவரது ஆதரவாளர்கள் நாடு தழுவிய அளவில் கடும் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது ராவல்பிண்டியில் உள்ள ராணுவத் தலைமையகம் மீது தாக்குதல் நடத்தியது மற்றும் பொது ச்சொத்துக்களை சேதப்படுத்தியதாகப் பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இதனை விசாரித்த கோர்ட்டு, இம்ரான்கானின் கட்சியைச் சேர்ந்த 47 முக்கியத் தலைவர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு தலா 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. மேலும், அவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 5 லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதுடன், அவர்களின் சொத்துக்களையும் பறிமுதல் செய்ய கோர்ட்டு உத்தரவிட்டது. இந்த தீர்ப்பை அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை என அக்கட்சியின் ஆதரவாளர்கள் வன்மையாகக் கண்டித்துள்ளனர். ஏற்கனவே இம்ரான்கான் ஊழல் வழக்குகளில் சிறையில் இருக்கும் நிலையில், இந்த தீர்ப்பு பாகிஸ்தான் அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# பரங்கிமலை- வேளச்சேரி இடையே பறக்கும் ரெயில் சேவை தொடங்குமா?



சென்னை, மார்ச். 09–

சென்னை எழும்பூர் ரெயில் நிலைய மறுசீரமைப்பு பணி காரணமாக கடந்த மாதம் 20–ந்தேதி முதல் மின்சார ரெயில் சேவைகள் குறைக்கப்பட்டு இயக்கப்படுகிறது. இதனால் பயணிகள் பல்வேறு இன்னல்களை சந்தித்து வருகின்றனர். இதற்கு ரெயில்வே நிர்வாகம் சார்பில் பல்வேறு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அதில் மிக முக்கியமாக வேளச்சேரி–பரங்கிமலை இடையே பறக்கும் ரெயில் சேவையை இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி (10–ந் தேதி) முதல் அந்த வழித்தடத்தில் ரெயில் சேவை தொடங்க இருப்பதாகவும் இதற்கு இடையே ரெயில்வே பாதுகாப்பு கமிஷனர் பாதுகாப்பு சோதனை மேற்கொள்ள இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில், வேளச்சேரி–பரங்கிமலை வழித்தடத்தில் கடந்த 5–ந்தேதி டெல்லியில் இருந்து ரெயில்வே பாதுகாப்பு கமிஷனர் ஜனக்குமார் கர்க் தலைமையில் வந்த குழுவினர் ரெயிலை இயக்கியும், டிராலிகளில் பயணித்தும் தண்டவாளப் பாதுகாப்பு நிலை குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

தொடர்ந்து, பாதுகாப்பு சான்றிதழ் வழங்கப்பட்டதும் இந்த வழித்தடத்தில் ரெயில் சேவை தொடங்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால், தற்போது இந்த வழித்தடத்தில் தண்டவாளப் பாதுகாப்பு பரிசோதனை முடிந்த நிலையில், ரெயில் இயக்க அனுமதிச்சான்று கிடைக்கவில்லை எனவும் தண்டவாளத்தில் சில பணிகள் மேற்கொள்ளவேண்டும் என பரிசோதனைக்கு வந்த குழுவினர் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் தெரிகிறது. அந்த பணிகள் முடிவடைந்த பின் பரங்கிமலை–வேளச்சேரி இடையே பறக்கும் ரெயில் சேவை தொடங்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# வார தொடக்கத்தில் அதிரடியாக குறைந்த தங்கம் விலை!



சென்னை, மார்ச். 09–

வார தொடக்க நாளான இன்று தங்கம் விலை அதிர டியாக குறைந்து ள்ளது. அதன்படி, தங்கம் கிராமுக்கு 100 ரூபாய் குறைந்து ஒரு கிராம் ரூ.14,950–க்கும் சவரனுக்கு 800 ரூபாய் குறைந்து ஒரு சவரன் ரூ.1,19,600–க்கும் விற்பனையாகிறது. வெள்ளி விலையில் மாற்றமில்லை. ஒரு கிராம் வெள்ளி 290 ரூபாய்க்கும் பார் வெள்ளி 2 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

## தேடப்படும் குற்றவாளி

பரமக்குடி தாலுகா காவல் நிலையம்,

குற்ற எண் : 77/2012

இராமநாதபுரம் முதன்மை அமர்வு நீதி மன்றம்

SC No. 273/2022

**Accused:**

தெ.பிரபாகரன்,
த/பெ. தெட்சிணாமூர்த்தி,
கீழாய்குடி,
இளையாண்குடி தாலுகா,
சிவகங்கை மாவட்டம்.
தமிழ்நாடு.

தொடர்புக்கு:
பரமக்குடி தாலுகா காவல் நிலையம்,
9498101643

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020